

# சிப் இணைப்பது எப்படி

இந்த வீடியோவில் எப்படி ஒரு துணியில் ஸிப்பர் புட் ஐ பயன்படுத்தி ஒரு ஸிப்பை அட்டாச் செய்வது என்று பார்ப்போம். ஸிப்பர் புட் என்பது மிஷினுடனேயே வரும் பாகம்.









சம அளவுள்ள இரண்டு துணிகளை எடுத்துக்கொள்ளுங்கள். அதே நீளத்திற்கு ஒரு ஸிப்பரும் கொஞ்சம் குண்டூசிகளும் தேவை.

துணியின் வெள்ளை நிறம் இருக்கும் பாகம் துணியின் பின்பகுதி. அதன் மறுபக்கம் தெரியும் சிகப்பு நிறம் தான் துணியின் மேல் பகுதி.

இப்போது ஸிப்பரை எடுத்துக் கொண்டால் ரன்னருடன் இருப்பது நல்ல  பாகம். அதன் மறுபக்கம் தட்டையாக இருக்கும்.
ரன்னரை இழுத்து ஸிப்பை திறந்து கொள்ளவும். துணியின் மேல் பகுதியை பார்த்தது போல் ஸிப்பின் மேல் பகுதியை வைக்கவும்.
துணியையும் ஸிப்பையும் நகராமல் பின் செய்து கொள்ளவும்.

ஊசியை தூக்கி விட்டு, பிரஷர் லீவரின் உதவியுடன் பிரஷர் புட் ஐ  கிளாம்ப்பை விட்டு எடுக்கவும். இப்போது ஸிப்பர் புட் ஐ பிரஷர் புட் பாருக்கு அடியில் வைக்கவும். பிரஷர் புட் ஐ கீழே இறக்கினால் ஸிப்பர் புட் பொருந்திவிடும்.

மிஷினை ஆன் செய்து ஸிப்பரையும் துணியையும் புட் ன் ஓரத்திற்கு கொண்டு வரவும்.

தைப்பதற்கு முன்னால், பேட்டர்ன் செலக்டர் டயலை யு வில் வைத்துக் கொள்ளவும். தையலின் நீளத்திற்கு 4 ஆம் எண்ணில் வைக்கவும். தைக்கும் பொழுது  பின்களை எடுக்க மறக்க வேண்டாம்.








கடைசி பகுதிக்கு வந்ததும் பிரஷர் புட் ஐ மேலே தூக்கி விட்டு துணியை வெளியே எடுத்து பிசுறு நூல்களை கத்தரித்து விடவும்.

இப்போது ஸிப்பரின் அடுத்த பக்கத்தை தைக்க வேண்டும்.

இன்னொரு துண்டு துணியின் ரைட் சைட் மேலே இருக்குமாறு வைத்து ஸிப்பரின் மறுபக்கத்தை பின் செய்து கொள்ளவும். பின்னர் ஸிப்பர் புட் ன் கீழ் சரியான கோட்டில் வைத்து தைக்கவும்.

இப்பொழுது ஸிப்பர் அழகாக பொருந்தி விட்டது.

எப்படி இருக்கிறது என்று பார்த்தீர்களா?

வித்தியாசமான டிசைன்களில் பல்வேறு வண்ணங்களில் உங்கள் கற்பனைத் திறனை உபயோகித்து நிறைய கைப் பைகளை நீங்கள் உருவாக்கலாம்.

கச்சிதமான தையலுக்கு நிச்சயம் முறையான பயிற்சி வேண்டும்.